DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 60 /2018**

**(CNR.No: TNTH06-000072 -2018 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முருகன்** | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW2** | |

---

நாள் :02.01.2024

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) 11.10.2023 ம் தேதி எனது பெயரிலுள்ள 15.08.2020 ம் தேதிய அசல் கிரைய ஆவணம் மற்றும் அதன் மூல ஆவணமான ஆண எண், 286/1987 ஆகிய ஆவணங்களை எச்,டி,எப்,சி வங்கியில் அடமானம் வைத்துள்ளதைப்பொறுத்து வங்கி மேலாளர் கொடுத்த கடிதம் தாக்கல் செய்கிறேன். **(அது பி. வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 23.02.1987 எனது தாயார் லட்சுமியம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி. வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) 15.08.2000 ம் தேதி எனது தகப்பனார் எனது பெயரில் எழுதிவைத்த உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி. வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 29.11.2001 ம் தேதிய பகவதிமுத்து, லட்சுமியம்மாள் அவர்களின் பெண் மக்கள் எனது அண்ணன் சேகருக்கு எழுதிக்கொடுத்த பதிவுபாகப்பாத்திய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி. வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 21.11.2011 ம் தேதி எனது அண்ணன் சேகர் எனக்கு எழுதிக்கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்

சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அது பி. வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.